ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ





யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார்
கோவிலடியைச் சேர்ந்த

அமரர்

# சின்னத்தம்பி சண்முகம்

அவர்கள்

இறைபதம் எய்தியமை நினைவாக
வெளியிடப்பெற்ற

## 31-ம் நாள்

# நினைவு மலர்

21-02-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சின்னத்தம்பி சண்முகம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த


# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# சின்னத்தம்பி சண்முகம் அவர்கள்



தோற்றம்: 
**27-5-1927**

மறைவு: 
**22-1-2000**

## திதி வெண்பா

*பிரமாதி ஆண்டு சேர் தை எட்டினிலே*
*ஏகும் திதி பிரதமை சேர் ஆயிலியத்தில் ஆடும்*
*சிவன் கழலே தஞ்சமெனச் சென்றார்* **சண்முகம்**
**அவன்** *நிழலை நாடி விரைந்து.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாள் அருள் ஆட்சி புரியும் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலே விஸ்வகர்மகுல மக்கள் கூடி வாழும் பதியாம் நாச்சிமார் கோவிலடியில் திரு. திருமதி சின்னத்தம்பி, அன்னம்மா தம்பதியினருக்கு அருமைப் புதல்வராக வைகாசி பதினான்கு (27- 05- 1927) ரேவதி நட்சத்திரத்தில் இப் பூமியிலே அவதரித்தார்.

நல்லைக் கந்தனிடம் பக்தி கொண்ட இவரது பெற்றோர் சண்முகவடிவேலான முருகப்பெருமானின் நட்சத்திரமாகிய ரேவதி நட்சத்திரத்தில் இவர் பிறந்ததால் இவருக்கு சண்முகம் என்ற திருநாமத்தை சூட்டி மகிழ்ந்தனர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த இவர் யாழ், வண்ணை பெரியபுலம் பாடசாலையில் கல்வி கற்றார். கல்வியில் காற்கோள் நாட்டமில்லாத இவர் தனது குலத்தொழில் பயில எண்ணி பஞ்சகம்மியரின் பாங்குறு தொழிலாக அமைந்த பொற்றொழிலை நன்கு கற்று இவரை பேசரிச் சண்முகம் என எல்லோராலும் அழைக்கும் அளவிற்கு சிறப்புடன் தொழில் புரிந்து வந்தார்.

இவர் தனது 21 வது வயதில் தந்தையை இழந்து தாயாரோடு வாழ்ந்த காலத்தில் இவரை திருமண வாழ்க்கையில் இணைக்க எண்ணிய உறவினர்கள் இவரது 26 வது வயதில் திரு. திருமதி, சிவசம்பு பாக்கியம் தம்பதியினரது அருமைப் புதல்வி இராசபுஸ்பம் (அமரர்) என்பவரை தேர்ந்தெடுத்து இவருக்கு திருமணம் செய்து வைத்தனர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"

என்ற தெய்வப்புலவர் வள்ளுவரின் பொய்யா மொழிக் குறளுக்கமைய மணவாழ்க்கையில் ஈடுபட்ட இவர் வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாளைத் தினமும் வணங்கி, வெள்ளிக்கிழமை தோறும் நல்லைக் கந்தனையும் வழிபட்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண வாழ்வின் செல்வம் நன் மக்கட் பேறு'' என்பதற்கிணங்க, அம்பிகையின் அருளால் நிர்மலாதேவி, கமலநாதன், லிங்கநாதன், சசிகலாதேவி, ஜெகநாதன், தயாநிதி, மனோரதி ஆகியோர் இவரது மக்கட் செல்வங்கள் ஆவர். இக்காலத்தில் இவர் தனது அருமைத் தாயாரை 1973-ம் ஆண்டில் இழந்தார்.

இவர் தம் மக்கள் தவிர்ந்து உறவினர், அயலவர்களுடனும் நன்கு பழகி அன்பு காட்டி வந்தார்.

பதினாறு பேறுகளையும் பக்குவமாக அமையப் பெற்றார். ஸ்ரீ காமாஷி அம்பாள் மேல் அளவிலாத பக்தி நிறைந்த இவர் ஆலயத் திருப்பணிகளில் பணிபுரிந்து (முன்நாள்) பரிபாலன சபை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

இவ்வாறு சிறப்புடன் வாழ்ந்த இவர் தம் பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய எண்ணி அதன் பயனாக மூத்த மகள் நிர்மலா தேவிக்கு திரு. அருளானந்தம் என்பவரையும் கமலநாதனுக்கு தையல்நாயகியையும், சசிகலாதேவிக்கு தனபாலசிங்கத்தையும் (அமரர்) தயாநிதிக்கு ரஞ்சிதகுமாரையும் மருமக்களாக்கிக் கொண்டார். பின் இவரது வழித்தோன்றல்களாக பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், முதலானோரைக் கண்டு அகமகிழ்ந்தார்.

மகிழ்ச்சியோடு வாழ்ந்த இவர் தனது 70 வது வயதில் சிறிது நோயுற்று வாழ்ந்த காலத்தில் இவரது அன்பு மனைவி திடீர் என 19- 12- 1998 அன்று இறைவனடி சேர்ந்தார். பின் துயரத்தோடு வாழ்ந்த இவர் மனைவியின் ஓர் ஆண்டுத் திவசம் நிறைவுற்ற பதினைந்தாம் நாளில் (22- 01- 2000) இவரையும் இனி இந்தப்பூவுலக வாழ்வு போதும் மேலுலகு வருவாயாக என்று காலன் அழைக்கும் வேளையில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை அயலவர் எல்லோரும் துயரத்தோடு சூழ்ந்து நின்று தேவாரம் சிவபுராணம் கந்தஷட்டி கவசம் ஆகிய பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கையில் இவரது உயிர் அவரது உடலை விட்டு அமைதியாக இறைவன் பாதத்தை நாடியது.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# திருமுறைப் பாடல்கள்

## தேவாரம்

இன்று நன்று நாளை நன்று என்று நின்ற விச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போக விட்டுப் போமினோ
மின்தயங்கு சோதியாள் வெண்நிலாவிளைமதிற்
கொன்றை துன்று சென்னியாள் கோடிக்காவு சேர்மினே,
வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறம் செய்மின் தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதார மெனீரே.

## திருவாசகம்

வேண்டத்தக்கதறி வோய்நீவேண்டமுழுதும் தருவோய் நீ
வேண்டுமயன் மாற்கரியோய் நீ வேண்டி என்னைப் பணி
கொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய் யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்றுண் டென்னில் அதுவும் உன்றன்
விருப்பன்றே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தவன்தேட
அங்ஙனே பெரிய நீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாய் இருவா
முக்கணா நாற்பெருந்த டந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோடம் நீடி அருமறைச்சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

புவியதனிற் பிரபு வான
புகலியில் வித்தகர் போலே
அமிர்த கவித் தொடைபாட
அடிமைதனக் கருள் வாயே
சமரில் எதிர்த்தசுர் மாளத்
தனிஅயில் விட்டருள்வோனே
நமசிவாயப் பொருளோனே
இரசத கிரிப் பெருமானே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை மாற்றிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங்காட்டிடைக் கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்-
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேத்திமார் புலம்பல்

எம் வாழ்வின் அகல் விளக்காய்
அன்னையாய் தந்தையாய்
அயலவரின் சோதரனாய் நண்பனாய்
வாழ்ந்தீர்களே அம்மப்பா
உங்களின் வாழ்க்கைப் பாதையில்
உம் மக்கட் செல்வங்களுக்கும்
அவர்களின் விழுதுகளான எங்களுக்கும்
நேரான பாதையை அமைத்துத் தந்து
வழிகாட்டினீர்கள்
உங்கள் உயிர் பாரை
விட்டு பறந்ததேதி எம்
எல்லோரையும் பாதித்ததே
— ஐயா!
நீங்கள் யாரைவிட்டுத்தான்
சென்றுள்ளீர்கள் எம்
நினைவை விட்டல்ல
உங்கள் ஆத்மா சாந்தி
அடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பேத்தி
ரூபா உதயராசா

பொன் கொண்டு பொருள் செய்து
எம்மைக் கண்கொண்டு காத்து வந்தீர்
அப்பப்பா என்றழைத்தால் தலையாட்டிச் சிரிப்பீர்கள்
மண்ணில் பிறந்த மாந்தர் விண்ணில் கலப்பதுண்மை
எண்ணி நாமிருந்த அந்த அந்திப் பொழுதினிலே
சுற்றம் சுற்றி நிற்க பதிகம் பாடிநிற்க
கண்ணில் நீர் தந்து சொல்லாமல் சென்றதேனோ
அப்பப்பா காணமல் சென்றதேனோ

பேத்தி
க. துஸ்யந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குப் பயன்படும் உலக நீதிப்பாக்கள்

## பயனற்றவை

ஆபத்துக் குதவாப் பிள்ளை
அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீரா தீர்த்தம்
பயனில்லை யேழுந்தானே.

## நன்றி பேணாதவர்கள்

பிள்ளைதான் வயதில் மூத்தால்
பிதாவின் சொற் புத்தி கேளான்
கன்னிறற் குழலாள் மூத்தால்
கணவனைப் பருதிப் பாரான்
தெள்ளுற வித்தை கற்றால்
சீடனும் குருவைத் தேடான்
உள்ளநோய் பிணிகள் தீர்ந்தால்
உலகர் பண்டிதரைத் தேடார்.

## வெற்றி வேட்கைதரும் உண்மைநெறி

மெய்போ லும்மே மெய்போ லும்மே
பழியா பழியா வருவது மொழியா தொழிவது
கழியா வருபுனல் இழியா தொழிவது
துணையொ டல்லது நெடுவழி போகேல்
புணைமீ தல்லது நெடும்புன லேகேல்
வழியே ஏகுக வழியே மீளுக
இவைகா னுலகற் கியலா மாறே
வழிய நலனே! வாழிய நலனே!
வெற்றி வேட்கை விரும்பிக் கற்றோர்
பெற்றே உற்றப் பீடுற நிற்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பேதையருக்கு நல்லகுணம் வராது

கற்பூரப் பாத்தி கட்டிக் கத்தூரி
எருவிட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளிதனை விதைத்தாலும்
அதன் குணத்தைப் பொருந்தக்காட்டும்
சொற்பேதை யர்க்கறிவிங் கினதாக
வருமெனவே சொல்லினாலும்
நற்போதம் வரதாங் கலர்குணமே
மேலாக நடங்குந் தானே.

## நம்பி மோசம் போதல்

கனலை நீரென் றெண்ணிக்
கடுவெளி திரியும் மான்போல்
மானுறும். இலவுகாத்த
மதியிலாக் கிள்ளையேபோல்
தேனினை யுண்டு தும்பி
தியங்கிய தகைமை யேபோல்
தானுனை யரசென் றெண்ணி
நாளையும் போக்கினேனே.

## எதுவும் விதியின் படியே நடக்கும்

வாழ்வது வந்து போது
மனந்தனில் மகிழ வேண்டா
தாழ்வது வந்த தானால்
தளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானால்
ஒருவரால் விலக்கப் போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக்
கேறுதல் கண்டி லீரோ?

## நரகத்தை அடைபவர்

தந்தையுரை தட்டினவன் தாயுரை இகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்தம் ஆணையை மறந்தோன்
சந்தமுறு தேசிகர் தாண்டினவன் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வது மெய்கண்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்பம் தொடர்ந்து வரும்

ஆவின மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோது அடிமை சாவ
மாவீரம் போகுமென்று விதைகொண்டோட
வழிதனிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொணா விருந்துவரச் சர்பந் தீண்டப்
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே.

## அன்பில்லா விருந்து

ஒப்புடன் முகம லர்ந்தே
உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும்
உண்பதே அமுதமாகும்
முப்பழ மொடுப லன்னம்
முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியி னோடு
கடும் பசி யாகுந் தானே

## புல்லார் குணம்

கதிர்பெறு செந்நெல் வாடக்
கார்க்குலங் கண்டுஞ் சென்று
கொதிநிறைக் கடலிற் பொய்யுங்
கொள்கை போற் குவல யத்தே
மதிதனம் படைத்த பேர்கள்
வாடினோர் முகத்தைப் பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார்
நிலையிலார்க் கிய மாட்டார்

## தீயவருக்குப் புத்தி கூறினால் தீமை விளையும்

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின் நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனற்றவை

திருப்பதி மிதியாப் பாதம்
    சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கீயாத் கைகள்
    இனியசொற் கேளாக் காது
புரப்பவர் தங்கள் கண்ணீர்
    பொழிதரச் சாகாத் தேகம்
இருப்பினும் பயனென் காட்டில்
    எரிப்பினும் இல்லை தானே.

## அழியாச் செல்வம்

வெள்ளத்தால் போகாது வெந்தணலால் வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவொளியக் குறைவு படாது
கள்ளர்க்கோ மிகஅரிது காவலோ மிகஎளிது கல்வியெனும்
உள்ளத்தேபொருளிருக்க உலகெலாம் தேடி அலைவதேனோ

## கருமமே கண்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செல்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணியனார்

## துன்பம் யாவும் சமம்

பாலுக்குச் சர்க்கரை யில்லையென் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போட உப்பில்லையென் பார்க்கும் குத்தித்தைக்கும்
காலுக்குத் தோல்செருப்பில்லையென் பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணைமெத்தை யில்லையென் பார்க்கும் விசன மென்றே.

## துஷ்டனைக் கண்டால் தூரவிலகு

கொம்புளதற் கைந்து குதிரைக்குப்பத்து முழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே - வம்புசெறி
தீங்கினர் தம்கண்ணிற் றெரியாத தூரத்தே
நீங்குவதே நல்லநெறி

## குலப்பெருமை

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினில் அடைத்து வைத்து
மிக்க தோர் மஞ்சள் பூசி மிகுமணம் செய்தாலுந்தான்
அக்குலம் வேறதாமோ? குக்கலே குக்கல் அல்லாற்
குலந்தனிற் பெரிய தாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- சின்னத்தம்பி + அன்னம்மா
  - சண்முகம் + இராசபுஸ்பம் (அமரர்)
    - நிர்மலாதேவி + அருளானந்தம்
      - ரூபாதேவி — உதயராசா
        - தட்சாகினி
        - விவேகா
      - லிங்கா — சத்தியமூர்த்தி
        - சங்கீத்
      - லதா
      - மேனகா
      - சுயந்தன்
    - கமலநாதன் + தையல்நாயகி
      - துஷ்யந்தி
      - சாருஜன்
      - ஜெயனி
      - ஹம்சனன்
      - கர்ஜிகா
    - லிங்கநாதன்
    - சசிகலாதேவி + தனபாலசிங்கம் (அமரர்)
      - துஷ்யரூபன்
      - துளசிராம்
      - தனுஜா
      - அனுராம்
    - ஜெகநாதன் (ஜெயா)
    - தயாநிதி + ரஞ்சிதகுமார் (பிரான்ஸ்)
      - நிதன்
      - நிஷாந்
      - நர்மினி
    - மனோரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத் தலைவர் சிவபதமெய்திய செய்தி கேட்டு உடன் வந்து எங்கள் துயரத்தில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி பல வழிகளிலும் எங்களுக்கு உறுதுணை புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், அமரரின் இன்றைய ஆத்மசாந்தி வைபவத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வணக்கம்

இல. 7. சேர். பொன்
இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

இவ்வண்ணம்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனகா அச்சகம்
340, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org